# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 197/2018/மா**
**ஆணை நாள்: 23–11–2018**

திரு. எம். குமார்,
46, காமராஜர் முதல் குறுக்குத் தெரு,
உள்ளகரம்,
சென்னை – 600 061. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் 14, பெரு நகர சென்னை மாநகராட்சி,
6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
சென்னை – 600 091. --- எதிர் மனுதாரர்

## ஆணை

சென்னை உள்ளகரம், 46, காமராஜர் முதல் குறுக்குத் தெருவில் வசிக்கும் திரு. எம். குமார், த/பெ. திரு. முருகப்பன் என்பவரது 05/09/2018 தேதியிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்றத்தில் 07/09/2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.197/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான விசாரணைகள், அறிக்கை பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திரு. எம். குமார் தனது முறையீட்டு மனுவில் தனது தாயார் திருமதி. எம். மல்லிகா இறந்து விட்டபடியால் அவர் பெயரில் உள்ள சொத்து வரியினை தன் பெயருக்கு மாற்றி தர மண்டல அலுவலர் 14வது மண்டலம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு, திருமதி. எம். மல்லிகா என்பவரது இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ், மற்றும் வாரிசுதாரர்களிடம்

இருந்து பெறப்பெற்ற ஆட்சேபனை இன்மை கடிதம் ஆகியவைகளுடன் சமர்ப்பித்துள்ளதாகவும் மண்டல அலுவலர், 14வது மண்டலம், சொத்து வரியை தன் பெயருக்கு மாற்றம் செய்யவில்லை என்றும், வரிவதிப்பு ஆவணத்தில் சொத்து வரியினை தன் பெயருக்கு மாற்றம் செய்து தர கோரி முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 14/9/2018 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரர் திரு. எம். குமார் 30/10/2018 அன்று இந்நடுவத்தில் ஆஜராகி விளக்கம் அளிக்க ஆணையிடப்பட்டது. அதன்படி, இம்முறைமன்ற நடுவத்தில் 30/10/2018 அன்று ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு. எம். குமார் தனது விளக்கத்தில் தனது தாயார் திருமதி. மல்லிகா 20.9.2010ல் இறந்துவிட்டதாகவும் தந்தை திரு. முருகப்பன் 06/04/2004ல் இறந்து விட்டதாகவும், தனக்கு திருமதி. பச்சையம்மாள் மற்றும் திருமதி. லட்சுமி என இரண்டு மூத்த சகோதரிகளும், திரு. ராமலிங்கம் என்று மூத்த சகோதரரும் உள்ளதாகவும், அதற்கான தாம்பரம் வட்டாட்சியரால் வழங்கப்பெற்ற வாரிசு சான்றிதழ் அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், வாரிசுதாரர்கள் என் பெயருக்கு சொத்து வரியை மாற்றம் செய்து தருவதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதாகவும் அதன் அடிப்படையில் மேற்படி சொத்துவரியினை தன் பெயருக்கு மாற்றம் செய்து தரவேண்டும் எனவும் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏதும் இல்லை என்றும், மண்டல அலுவலர் கோரும் பத்திர ஆவணம், வில்லங்க சான்று தன்னால் வழங்க இயலாது என்றும் தனது வாக்குமூலத்தில் அளித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 30/10/18 தேதியிட்ட அழைப்பாணையின்படி 09/11/2018 அன்று ஆஜரான பெருநகர சென்னை மாநகராட்சி 14வது மண்டல அலுவலர் தனது வாக்குமூலத்தில் திரு. எம். குமார் என்பவருடைய முறையீட்டு மனு விபரம் தெரியும் என்றும், மனுதாரர் தனது தாயார் திருமதி. எம். மல்லிகா என்பவர் பெயரில் உள்ள சொத்து வரியினை தனது பெயருக்கு மாற்றி தருமாறு கோரியுள்ளார் என்றும், முறையீட்டு மனுதாரர், மனுதாரரின் உடன் பிறந்தோர்கள், காலம் சென்ற திருமதி எம். மல்லிகா பெயரில் உள்ள சொத்து வரியினை திரு. எம். குமார் பெயருக்கு மாற்றிதர எந்தவித ஆட்சேபனையும் இல்லை எனத் தெரிவித்து ஒரு வெள்ளைத் தாளில் வருவாய் அலுவலர் என முகவரியிட்டு இருவர் பெயரிட்டும், ஒருவர் கையொப்பம் இட்டும் வழங்கியுள்ளார்கள் என்றும் வாரிசு சான்றிதழ் தவிர வேறு எந்த ஆவணமும் மனுதாரர் தாக்கல் செய்யவில்லை என்றும் ஏற்கனவே சொத்துவரி வரிசை எண்.14-168-01745-000ன்படி அரையாண்டு வரி வசூல் ரூ.85/ல் இருந்து ரூ.435/- வசூல் செய்யப்படுகிறது என்றும் மனுதாரரின் தந்தைக்கு வாரிசுகளாக ஐந்து

நபர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதில் திருமதி. மல்லிகா இறந்த பின்பு மனுதாரரை சேர்த்து நால்வர் உள்ளனர் என்றும் மற்ற மூவரும் தங்களது உரிமையை விட்டு கொடுக்க விரும்பினால் அவர்கள் மனுதாரருக்கு சட்டபூர்வமான அவர்களுக்குள்ள உரிமையை விடுதலை ஆவணம் மூலம் பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்றும் அவ்வாவணத்துடன் விண்ணப்பித்தால் பெயர் மாற்றம் செய்து தருவதற்கு எந்தவித தடையும் இல்லை என வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மண்டல அலுவலர், 14வது மண்டலம், பெருநகர சென்னை மாநகராட்சி விசாரணையின் பொழுது அளித்த 8/11/2018 தேதியிட்ட அறிக்கையில் காலம் சென்ற திருமதி. மல்லிகா என்பவரது பெயரில் உள்ள சொத்து வரியினை திரு. எம். குமார் என்பவர் பெயருக்கு மாற்றம் செய்ய சுத்த விக்கிரய பத்திரத்தின் நகல் மற்றும் வில்லங்க சான்று நகல் (Notary Public) ஒப்புகையுடன் சமர்ப்பித்தால் மட்டும் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என 14/7/18 தேதியிட்ட கடிதத்தில் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய மாநகராட்சியின் விதி முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நேர்வில் மேற்படி மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. எனவே, சொத்துவரி மாற்றம் குறித்த விதிமுறைகளின்படி உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்ய முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 23-ஆம் நாளன்று கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

பெறுநர்

1. திரு. எம். குமார்,
   46, காமராஜர் முதல் குறுக்குத் தெரு,
   உள்ளகரம்,
   சென்னை – 600 061.

2. மண்டல அலுவலர்,
   14வது மண்டலம் ,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,
   சென்னை – 600 091.